முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 949

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.05.2022, வியாழக்கிழமை

1. ஞானவேலி கொண்ட அரங்கனே
ஞானிகள் துணைகொண்ட தேசிகனே
தானதர்மபலம் கொண்ட குருராஜனே
தர்மனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானும் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 22 ம் நாள், 05.05.2022 வியாழக்கிழமை)
நாட்டிடுவேன் அரங்கன் பலம் உலகறிய
வானவர்கள் மெச்சவே மாதர்மத்தை
வள்ளலாக செய்து அருள்புரிகின்ற
3. அருள்புரிகின்ற அரங்கனே ஞானதேசிகனே
அப்பனே ஆறுமுகன் யான் உன்னுள் இருந்து
காப்பாக உலகநலம் வேண்டி
கருணைகொண்டு வழிநடத்தி வர
4. வருகின்ற உன் சொல் செயல்கள் அத்தனையும்
வருமுலகில் உலகத்தை காத்தருளும்
தருகின்ற உன் தர்மமே
தரணியோர்க்கு பிறவாபெரும்பேற்றை தந்தருளும்
5. அருளாக அரங்கன் அறமாக
அன்னதான சேவை உலகமெங்கும் பரவிட
இருள்விலகும் இந்த உலகம் புதுஒளிபெருகும்
இந்த உலகில் அற்புதங்கள் பல நடக்கும்
6. இனிதே அரங்கனை கண்டு இந்த உலகோர் ஞானதீட்சை அடைய
ஆறுமுகன் என் ஞான பலமாக அடைந்து
அடைந்துமே உலகோர் பிறவாபெரும்பேறு என்கின்ற
அழியாமையை பிசகின்றி அரங்கன் வழி என்அருளாக அடைய நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–